# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 177 | புதன்கிழமை Wednesday | 23.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## காலை உணவு திட்டம் விரிவாக்கம்:

# பள்ளி மாணவர்களுடன் அமர்ந்து உணவு அருந்திய முதலமைச்சர் விஜய்



கல்வி வளர்ச்சிக்காக, தமிழகத்தில் பல்வேறு நலத்திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் பள்ளிக்குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைப்பாட்டை தடுக்கவும், பள்ளி வருகையை அதிகரித்து. இடைநிற்றல் இல்லாத தொடர்ச்சியான கல்வியை ஊக்குவிக்கும் வகையில் அரசு பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரையில் படிக்கும் குழந்தைகளுக்காக கடந்த 2022-ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் அப்போதைய முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், முதல்-அமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை கொண்டு வந்தார்.

பின்னர் அரசு உதவி பெறும் பள்ளிக்கூடங்களிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் 37 ஆயிரத்து 447 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 19.34 லட்சம் மாணவ-மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

த.வெ.க.ஆட்சிஅமைந்தவுடன் இந்த உணவு திட்டத்தின் பெயர் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத்திட்டம் என்று மாற்றப்பட்டது. இதைத்தொடர்ந்து அரசு,அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரையில் இந்த திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என்றும், இதன் மூலம் கூடுதலாக 15 லட்சத்து 30 ஆயிரம் மாணவ-மாணவிகள் பயனடைவார்கள் என்றும் முதல்-அமைச்சர் விஜய் அறிவித்தார்.

இந்த விரிவாக்க திட்டம் கடந்த 17-ந்தேதி அன்று பெரியார் பிறந்தநாளில் தொடங்கி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட் டது. ஆனால், தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்-அமைச்சர் லண்டன் சென்றதால், திட்டத்தின் தொடக்கவிழா 22-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

### தொடக்க விழா

இந்த நிலையில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு விரிவாக்கத் திட்டத்தை முதல்-அமைச்சர் விஜய், சென்னை திருவான்மியூர் காந்திகிராமத்தில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் இன்று தொடங்கி வைத்தார். அப்போது பள்ளி மாணவர்களுக்குமுதல்-அமைச்சர் விஜய் சக்கரை பொங்கலை பரிமாறினார்.தொடர்ந்துபள்ளி மாணவர்களுடன் அமர்ந்து முதல்-அமைச்சர் விஜய் உணவு சாப்பிட்டார்.

இந்த திட்டத்தின் கீ மொத்தம் 44,984 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் 34 லட்சத்து 64 ஆயிரம் மாணவ-மாணவிகள் பயன் பெறுவார்கள்.இந்ததிட்டத்துக்காக கூடுதலாக ரூ.217.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் (செங்கல்பட்டு), தாராபுரம் (திருப்பூர்) ஆகிய 2 மாவட்டங்களை தவிர்த்து மற்ற மாவட்டங்களில் இந்த திட்டம் இன்று முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இந்த திட்டத்தின் உணவுபட்டியலில் திங்கட்கிழமை - உப்புமா, செவ்வாய்க்கிழமை- கிச்சடி, புதன்கிழமை - பொங்கல், வியாழக்கிழமை உப்புமா, வெள்ளிக்கிழமை - இனிப்பு வகை உணவு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

காலை உணவுத் திட்டத்தினை செயல்படுத்திடும் சமையல் கூடங்கள் மற்றும் உணவு பரிமாறும் இடங்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட வேண்டும் என்றும் ஊட்டச்சத்து மிகுந்த உணவு கிடைப்பதை உறுதி செய்திட, தொடர்ச்சியாக கண்காணிக்குமாறும், அதிகாரிகளுக்கு முதல்-அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

# பட்டினப்பாக்கம் தலைமைச் செயலகம் திட்டத்துக்கு எதிராக திமுக வழக்கு





சென்னை: பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட எதிர்ப்பு தெரிவித்து திமுக சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழக தலைமைச் செயலகத்துக்கு புதிய கட்டிடம் கட்டப்படும் என்று புதிதாக பொறுப்பேற்ற தவெக அரசு அறிவித்திருந்தது.1,200 கோடி ரூபாய் செலவில் 25.55 ஏக்கர் பரப்பில் சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பாக செப்டம்பர் 8-ம் தேதி தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது.

இந்த அரசாணையை ரத்து செய்யக் கோரியும், அரசாணைக்கு தடை விதிக்க கோரியும் திமுக முன்னாள் எம்எல்ஏ வேலு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அதில், புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பாக பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணையில், சுற்றுச்சூழல் துறை, தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையம், மீன்வளத்துறை உள்ளிட்ட துறைகளின் ஒப்புதல் பெறப்பட்டது குறித்து "எந்த குறிப்பும் இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

பட்டினப்பாக்கம் பகுதியில் ஏராளமான பள்ளிகள் அமைந்துள்ளன. மெட்ரோ ரயில் பணிகளும் நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே போக்குவரத்துநெரிசல்மிகுந்த இந்த பகுதியில் தலைமைச்செயலகம்அமைத்தால் பள்ளி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும், அந்தப் பகுதியில் உள்ள 9 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கும் கடுமையான பாதிப்பு ஏற்படும் எனக் கூறப்பட்டு ள்ளது.

பட்டினப்பாக்கம் பகுதியில் புதிய தலைமைச் செயலகம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து ஏற்கெனவே மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர், எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன எனவும் கூறப்பட்டுள்ளது.

கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதியான பட்டினப்பாக்கத்தில், கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்கு எந்த கட்டுமானமும் மேற்கொள்ளக் கூடாது. இந்த பகுதி ஆமைகள் இனப்பெருக்கம் செய்யும் பகுதியாகவும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. பட்டினப்பாக்கத்தை தேர்வு செய்ததற்கான காரணம் எதுவும் அரசாணையில் குறிப்பிடப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியு ள்ளார். அரசு நிதி நெருக்கடியில் இருப்பதாக அறிவித்துள்ள நிலையில் 1,200 கோடி ரூபாய் செலவில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பாக பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை தன்னிச்சையானது என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆசிய விளையாட்டு போட்டியில் சாதித்த கிரிக்கெட்டர் கமலினிக்கு ரூ.75 லட்சம் பரிசு தொகை அறிவிப்பு





ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்றமதுரைகிரிக்கெட் வீராங்கனைக்கு ரூ. 75 லட்சம் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

ஜப்பானின் நகோயாவில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியின் மகளிருக்கான கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இந்தியா - இலங்கை அணிகள் மோதின. இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 216 ரன்கள் குவித்தது. பின்னர், 217 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி ஆடிய இலங்கை அணி 15.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 69 ரன்களுக்கு சுருண்டது. இதனால், இந்திய அணி 147 ரன்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றியைப் பதிவு செய்தது.

இந்த நிலையில், தங்கப்பதக்கம் வென்ற இந்திய அணியில் இடம்பெற்றிருந்த மதுரையைச் சேர்ந்த வீராங்கனை கமலினிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள முதல்வர் விஜய், அவருக்கு ஊக்கத்தொகையாக ரூ. 75 லட்சம் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் விஜய் தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "ஜப்பானில் நடைபெற்றுவரும் 20-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில், மகளிர் கிரிக்கெட் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றுசாதனைபடைத்துள்ள இந்திய மகளிர் அணிக்கும், அவ்வணியில் இடம்பெற்றுள்ள தமிழ்நாட்டின், மதுரையைச் சேர்ந்த வீராங்கனை கமலினிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும்,பாராட்டுகளையும் தெரிவித்துகொள்கிறேன்.

கிரிக்கெட் வீராங்கனை கமலினியின் மகத்தான சாதனையைப் பாராட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் உயரிய ஊக்கத்தொகையாக ரூ. 75 லட்சம் வழங்கப்படும். இவரைப் போன்ற திறமைமிக்க அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் தமிழ்நாடு அரசு என்றும் உறுதுணையாக நிற்கும். கமலினியின் இந்த வெற்றி, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும், மகளிருக்கும் புதிய உத்வேகத்தையும், நம்பிக்கையையும் அளிக்கும். இவர் மேலும் பல சாதனைகள் புடைக்க வாழ்த்துகிறேன்!" என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் காலை உணவுத் திட்டத்தை தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் மற்றும் ஆசிரியர்கள் தொடங்கி வைத்தனர்



6 முதல் 8-ம் வகுப்பு மாணவர்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் செவ்வாய்க்கிழமை தொடங்கப்பட்டது.

பள்ளி தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் திட்டத்தை தொடங்கி வைத்தார். ஏற்பாடுகளை ஆசிரியர் ஸ்ரீதர், ஆசிரியை சிவரஞ்சனி, நகராட்சி பணியாளர் தேன்மொழி, உணவுப் பணியாளர் தமிழரசி ஆகியோர் செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். காலை உணவுத் திட்டத்தால் மகிழ்ச்சியடைந்த மாணவ, மாணவியர் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்ட அரசு தலைமை பல்நோக்கு உயர் சிறப்பு சிகிச்சை மருத்துவமனையில் தூய்மை மற்றும் சுகாதாரப்பணிகள் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.கே.ஜி.அருண்ராஜ் (21.09.2026) அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

# ஈரோடு மாவட்டத்தில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது



ஈரோடு மாவட்டம், திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா-2026 (நமது அங்கன்வாடி நமது பொறுப்பு) நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, தலைமையில் நேற்று (22.09.2026) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் தேசிய ஊட்டச்சத்து மாதமாக கொண்டாப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நமது அங்கன்வாடி நமது பொறுப்பு என்ற கருப்பொருளாக கொண்டு கொண்டாடப்பட்டு வருகிறது. சத்தான உணவை உட்கொள்வது எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று உடலுக்குத் தேவையான அளவில் சரிவிகித உணவை எடுத்துக்கொள்வதும் அவசியமாகும். வயது, உடல்நிலை, காலசூழல் மற்றும் வாழ்வியல் முறைக்கேற்ப பல்வேறு ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுகளை சரியான அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்ட சிறுதானியங்கள் உள்ளிட்ட ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பொருட்களை உணவில் சேர்த்துக்கொள்வதுடன், ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். சரிவிகிதமற்ற உணவுப் பழக்கத்தால் ஏற்படும் வாழ்க்கைமுறை சார்ந்த பாதிப்புகளைத் தவிர்க்க, உணவு குறித்த விழிப்புணர்வைவளர்த்துக்கொள்வது அவசியமாகும். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலம் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள். பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு தேவையான ஊட்டச்சத்து மற்றும் சுகாதார வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மாணவர்கள் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை தங்களது குடும்பத்தினர் மற்றும் பொதுமக்களிடம் எடுத்துச் செல்லும் விழிப்புணர்வு தூதர்களாக நாம் செயல்பட வேண்டும் என தெரிவித்தார்.

நேற்றைய தினம் நடைபெற்ற விழாவில் சமுதாயத்தில் ஊட்டச்சத்து மேம்படுத்துவதற்கான உத்திகள் என்ற தலைப்பில் குறும்படம் தயாரிக்கும் போட்டியில் 3 மாணவியர்களுக்கு பரிசு, குறைந்த செலவில் அதிக ஊட்டச்சத்து உணவு தயாரிக்கும் போட்டியில் 3 மாணவியர்களுக்கு பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட அலுவலர் பவித்ரா, திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரி செயலர் சந்திரசேகர், வேளாளர் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர். ஆர்.பார்வதி, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்சாந்தி, ஈரோடு மாவட்ட பயிற்சி மருத்துவ அலுவலர் மரு. மகேஷ்வரி, உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் பெண் பரபரப்பு புகார் ரூ.2 கோடி கடன் பெற்றுத் தருவதாகக் கூறி ரூ.11 லட்சத்து 80 ஆயிரம் பணம் பெற்றுக்கொண்டு ஏமாற்றியதாகக் கூறி, தூத்துக்குடியைச் சேர்ந்த பெண் ஒருவர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளார். தூத்துக்குடி பிரையண்ட் நகரைச் சேர்ந்த முத்துசாமியின் மனைவி ரேவதி அளித்தார்.

ஈரோடு மாவட்டத்தில் "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" விரைவில் தொடங்கப்படவுள்ளதை முன்னிட்டு

# ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள தங்க மோதிரம் பாதுகாப்பு அறையில் அமைச்சர் அருண்ராஜ் ஆய்வு



ஈரோடு மாவட்டம், அரசு தலைமை பல்நோக்கு உயர் சிறப்பு சிகிச்சை மருத்துவமனையில் நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.கே.ஜி. அருண்ராஜ் நேரில் பார்வையிட்டு (21.09.2026) அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" விரைவில் தொடங்கப்படவுள்ளதை ஒட்டி ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள தங்க மோதிரம் பாதுகாப்பு அறை (Locker Room) யினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, தங்கமோதிரங்களை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில் 24 மணி நேரமும் மின்சார வசதி, சி.சி.டி.வி கேமரா கண்காணிப்பு வசதி உள்ளிட்ட பாதுகாப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். ஈரோடு அரசு மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், மருந்தகம், மருந்து இருப்பு, ஆய்வகம், அவசர சிகிச்சை பிரிவு, படுக்கை வசதி, கழிப்பறை வசதி, சுற்றுப்புறத் தூய்மை மற்றும் சுகாதாரப்பணிகள் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டு, மருத்துவமனை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்குமாறு மருத்துவ அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, (நலப்பணிகள்) மரு.ஜெயந்தி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளர் மரு.வெங்கடேஷ், உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்

# மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (22.09.2026) நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், அடுக்கு மாடி குடியிருப்பு, மாதாந்திர உதவித்தொகை, பேட்டரி வீல் சேர், வீடு கட்ட கடன், குடிநீர்வசதி ரோடுவசதி, தெருநாய்கள் தொல்லை, பராமரிப்பு உதவித்தொகை, வங்கி கடன் உதவி, காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 29 மனுக்கள் வரப்பெற்றன. மாற்றுத்திறனாளிகள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறைஅலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சங்கர் கணேஷ் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# கருங்கல்பாளையம் காமராஜர் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு காலை உணவினை அமைச்சர் ம.விஜய் பாலாஜி வழங்கினார்



பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தின் கீழ்பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு காலை உணவினை வழங்கினார். ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் திருவான்மியூர் சென்னை நடுநிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி , கருங்கல்பாளையம் காமராஜர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு காலை உணவினை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் திருவான்மியூர் சென்னை நடுநிலைப் பள்ளியில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையம் காமராஜர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கைத்தறி, துணிநூல் மற்றும்கதர்த்துறைஅமைச்சர் ம.விஜய் பாலாஜி அவர்கள் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு காலை உணவினை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தலைமை வகித்தார்.

பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் பசியின்றி கல்வி கற்கவும், அவர்களின் அறிவாற்றல் வளர்ச்சி பெறவும், மாணவர் வருகை அதிகரிக்கவும், மாணவர்களை தக்கவைக்கவும் மேலும், வேலைக்குச் செல்லும் தாய்மார்களுக்கு உற்ற உதவியாகவும், குழந்தைகளின் உடல் நலம் பேணுவதற்கும் ஊட்டச்சத்து உணவாக அமையும். இத்திட்டத்தின் மூலம் ஈரோடு மாவட்டத்தில் ஏற்கனவே உள்ள 1208 பள்ளிகளில் 59,070 மாணவ, மாணவிகள் காலை உணவுத்திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகிறார்கள். தற்பொழுது 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் புதிதாக 423 பள்ளிகளில் 28,984 மாணவர்கள் என மொத்தம் ஈரோடு மாவட்ட முழுவதும் 1,631 பள்ளிகளில் பயிலும் 88,054 மாணவ மாணவிகள் பயன்பெற உள்ளார்கள். நேற்றைய தினம், கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் விஜய் பாலாஜி ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையம் காமராஜர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தின் கீழ்பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு காலை உணவினை வழங்கி, மாணவ மாணவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார். மேலும், அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு காலை உணவை வழங்கினார்கள்

இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , திட்ட இயக்குனர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) செந்தில்குமரன், முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.மான்விழி, மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் பாக்கியலட்சுமி, மாணவ, மாணவர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சட்டம் ஒழுங்கில் கூடுதல் கவனம் செலுத்தி கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்றங்களை கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நம் நாடு நம் மக்கள் நம் எதிர்காலம் கட்சி பொதுச்செயலாளர் அருணாதேவி ரமேஷ் பாண்டியன் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் மனு



தமிழகம் முழுவதும் கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்றச் சம்பவங்களை கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் பொது அமைதியை உறுதி செய்யவும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் நம் நாடு நம் மக்கள் நம் எதிர்காலம் கட்சியின் பொதுச்செயலாளரும், வழக்கறிஞருமான ஆர். அருணாதேவி மனு அளித்துள்ளார்.

அவர் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் வசித்து வரும் தான், தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருவதுடன், நம் நாடு நம் மக்கள் நம் எதிர்காலம் கட்சியின் பொதுச்செயலாளராகவும் உள்ளதாக தெரிவித்துள்ளார்.சமீபகாலமாகதமிழகம்முழுவதும் கொலை, கொள்ளை மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால், பொதுமக்கள் அச்சத்துடன் வாழும் சூழல் ஏற்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிட்டுள்ளார். பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்படும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சட்டம் ஒழுங்கை பாதுகாக்க காவல்துறைக்கு தேவையான சுதந்திரமும் அதிகாரமும் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், கொடூரமான குற்றங்களில் ஈடுபடும் நபர்கள் மீது துரிதமான சட்ட நடவடிக்கை மேற்கொண்டு, சட்டப்படி உரியதண்டனைகிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்எனவும்வலியுறுத்தியுள்ளார். எனவே,பொதுமக்களின் பாதுகாப்புமற்றும்பொது அமைதியை கருத்தில் கொண்டு தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதுதொடர்பான தனது கோரிக்கையை தமிழக முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல மாவட்ட ஆட்சியர் உரிய பரிந்துரைசெய்யவேண்டும் எனவும் ஆர். அருணாதேவி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# தூத்துக்குடியில் காமராஜர் காலை உணவு திட்டத்தை அமைச்சர் ஸ்ரீநாத் துவக்கி வைத்தார்



தூத்துக்குடியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம் விரிவாக்கம் துவக்க விழாவில் அமைச்சர் ஸ்ரீநாத் கலந்து கொண்டு மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் சென்னையில் இன்று பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம் விரிவாக்கம் திட்டப்பணிகளை துவக்கி வைத்தார். இதைத் தொடர்ந்து தூத்துக்குடி சாமுவேல்புரம் மாநகராட்சி, அரசு மேல்நிலைப்பள்ளி நடைபெற்ற நிகழ்ச்சியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ. ஸ்ரீநாத், மாவட்ட ஆட்சியர் விஷ்ணுமகாஜன் ஆகியோர் மாணவர்களுக்கு உணவுகளை பரிமாறி மாணவர்களுடன் உணவருந்தினார்.இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தெரிவித்ததாவது : பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம் அரசு மற்றும் உதவிப்பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புகள் வரைபள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இன்றைய தினம் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத் திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று துவக்கிவைத்தார்கள்.

அதன் அடிப்படையில் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தூத்துக்குடி சாமுவேல்புரம் மாநகராட்சி, அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். தூத்துக்குடி மாவட்டத்தில் ஊரக மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள 1223 பள்ளிகளில் 35,283 மாணவர்களும், மாநகராட்சிக்குட்பட்ட - 100 பள்ளிகளில் 14,404 மாணவர்களும், நகராட்சிகள் பகுதிக்குட்பட்ட - 55 பள்ளிகளில் - 7572மாணவர்களும்ஆக மொத்தம் 1378 பள்ளிகள் 57,259 மாணவர்கள் இத்திட்டத்தில் மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் பயன்பெற்றுவருகிறார்கள்.

இத்திட்டத்தை மாணவ - மாணவியர்கள் நன்கு பயன்படுத்தி கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என அமைச்சர் ஸ்ரீநாத் தெரிவித்தார். இந்நிகழ்வில், சார் ஆட்சியர்தூத்துக்குடிஆகாஷ் குப்தா, உதவி ஆட்சியர் பயிற்சி பாட்டீல் கிருஷ்ணா பபுருவான், மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், ஆசிரியர்கள்,மாணவ-மாணவியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மறைந்த ஆட்டோ ஓட்டுனருக்கு சங்கத்தின் சார்பாக நிதி உதவு



மதுரை திருப்பரங்குன்றம் அடுத்துள்ள திருநகரைச் சேர்ந்தவர் மாரிமுத்து (35) ஆட்டோ ஓட்டுனரான இவருக்கு திருமணமாகி மனைவியும் இரண்டு குழந்தைகளும் உள்ளனர்.இந்நிலையில்,கடந்த மாதம் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்து ஒன்றில் மாரிமுத்து பரிதாபமாக உயிரிழந்தார். குடும்பத்தின் ஒரேவாழ்வாதாரமாக இருந்த அவரது மறைவு, அக்குடும்பத்தினரை கடுமையான சோகத்திலும் நிதி நெருக்கடியிலும் ஆழ்த்தியது. மறைந்த மாரிமுத்து உறுப்பினராகச் செயல்பட்டு வந்த 'வைகை மீட்டர் ஆட்டோ' அமைப்பைச் சேர்ந்த சக ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் வழக்கறிஞர் பாலாஜி தலைமையில் அனைவரும் ஒன்றிணைந்து,அவரது குடும்பத்தி னருக்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தனர்.

மேலும், தங்கள் சார்பில் சேர்க்கப்பட்ட ரூ.1,25,000 (ஒரு லட்சத்து 25 ஆயிரம்) நிதி உதவியை அவரது குடும்பத்தினரிடம் வழங்கி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர் மேலும் குழந்தைகளின் கல்வி செலவுகளுக்கும் உதவுவதாக தெரிவித்தனர்.இதுகுறித்து வைகை மீட்டர் ஆட்டோ அமைப்பின் உறுப்பினர்கள் தமிழரசன் மற்றும் சுரேஷ் கூறுகையில்:

"மாரிமுத்துவின் குழந்தைகள் படிப்பு உட்பட எதிர்காலத்தில் தேவைப்படும் எந்தவொரு உதவிக்கும் எங்கள் அமைப்பு எப்போதும் உறுதுணையாக இருக்கும். இதுவரை எங்கள் அமைப்பின் மூலம் உயிரிழந்த 7 சக ஆட்டோ ஓட்டுநர்களின் குடும்பங்களுக்கு இதுபோன்று நிதியுதவி அளித்து ஆதுரவு வழங்கியுள்ளோம். 500-க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் உறுப்பினர்களாக உள்ள எங்கள் அமைப்பில், ஒவ்வொருவரும்தங்களால் இயன்ற தொகையைப் பகிர்ந்து இந்த நிதியைத் திரட்டியுள்ளோம்," என்று தெரிவித்தனர்.

கடின உழைப்பால் அன்றாட வாழ்வை நடத்தும் ஆட்டோ ஓட்டுநர்கள், தங்களில் ஒருவரை இழந்த நிலையிலும் ஒன்றுதிரண்டு, சக ஓட்டுநரின் குடும்பத்திற்குத் தோள் கொடுத்து உதவியுள்ள இந்த மனிதாபிமானச் செயல் பொதுமக்களிடையேயும் சமூக வலைதளங்களிலும் பெரும் பாராட்டையும் நெகிழ்ச்சியையும்பெற்று வருகிறது.

# பெண்களின் சாதனையை கொண்டாடிய 'பிரைடு அச்சீவர்ஸ்' விருது விழா




பெண்களின் உழைப்பு, தன்னம்பிக்கை மற்றும் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில், யாக்னா குழுமத்தின் பினாக்கிள் சார்பில் 'பிரைடு அச்சீவர்ஸ்' விருது வழங்கும் விழா சாய்பாபாகாலனி பகுதியில் உள்ள தனியார் ஓட்டல் அரங்கில் நடைபெற்றது.

பெண்களின் தன்னம்பிக்கை முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்கில், விருதுகளுக்கான பதிவு மற்றும் விருது வழங்குவதற்கு எவ்வித கட்டணமும் பெறாமல் இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருவதாக யாக்னா குழும நிறுவனர் கவுதம் பாலசுப்ரமணியம் மற்றும் பினாக்கிள் பிரைடு அச்சீவர்ஸ் தலைவர் ரெஹானா தெரிவித்தனர். விழாவில் முதல் தலைமுறை பெண் தொழில் முனைவோர், குழுவாக இணைந்து சாதித்த பெண் தொழில் முனைவோர், தனியாக சாதித்து வரும் பெண்கள் என 3 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மணிமேகலை மோகன், விருதுகளை வழங்கி சாதனையாளர்களை கௌரவித்தார். விழாவில், விருது பெற்ற பெண்கள் தங்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் இணைந்து தங்களது சாதனையை கொண்டாடும் வகையிலும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.பெண்களின் சாதனைகளை அங்கீகரித்து, அவர்களின் உழைப்பையும் தன்னம்பிக்கையையும் கொண்டாடும் வகையில் 'பிரைடு அச்சீவர்ஸ்' விழா அமைந்தது குறிப்பிட தக்கது.

# கோவையில் பொதுமக்களுக்கு இலவச நிலவேம்பு கசாயம்



கோவை சிவாஜி காலனி பேருந்து நிலையம் பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, டெங்கு காய்ச்சலை தடுக்கும் பொருட்டு, பொதுமக்களுக்கு இலவச நிலவேம்பு கசாயம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு வழங்கபட்டது. டெங்கு காய்ச்சல் வேகமாகப் பரவி வரும் நிலையில், தினமும் 200-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மேலும், தமிழகம் முழுவதும் அரசு, மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 2,000 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்,டெங்கு காய்ச்சலைப் பரப்பும் ஏடிஸ் - ஏஜிப்டை வகை கொசுக்களின் பெருக்கம் அதிகரிப்பதால், தமிழகத்தில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கைதொடர்ந்து அதிகரித்து வருகிறது இதனை கட்டுப்படுத்தவும், பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தும் வகையிலும், கோவை சிவாஜி காலனி பேருந்து நிலையத்தில்,நிலவேம்பு கசாயம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணைத் தலைவரும், நோட்டரி வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் தலைமை தாங்கி,பொதுமக்களுக்கு நிலவேம்பு கசாயத்தை வழங்கினார். சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இந்த நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது. மேலும் இத்தகைய நில வேம்பு கசாயம், பருகுவதால், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்,நோய் தொற்று தடுப்பு முறைகளை இத்தகைய மூலிகை குடிநீர் உடலில் ஏற்படுத்தும் எனவே இதனை இலவசமாக வழங்கி வருவதாக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் தெரிவித்தார் இந்த நிகழ்ச்சியில், வைத்தியர் பாலகிருஷ்ணன், ரவிச்சந்திரன், கவுண்டம்பாளையம் அமல் ராஜ், வழக்கறிஞர் குமாஸ்தா பால்ராஜ், லட்சுமி, திவ்யா, ஜெபா, ஓய்வு பெற்ற மாநகராட்சி சுகாதார அலுவலர் நாகராஜ், மருதமலை திருக்கோவில் பேருந்து ஓட்டுநர் முருகேசன், கொண்டனர் என்பது குறிப்பிட த்தக்கது.

# பட்டாசு தொழிலில் பாதுகாப்பை உறுதி செய்ய புதிய கண்காட்சி



தமிழ்நாட்டின் மிக முக்கியத் தொழில் துறையான பட்டாசு உற்பத்தியில் விபத்துகளை முற்றிலுமாகத் தடுத்து, தொழிலாளர் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் "பாதுகாப்பான பட்டாசு உற்பத்திக்கான தொழில்நுட்பம் என்ற தலைப்பில் தேசிய அளவிலான மாபெரும் கலந்தாய்வு கோவையில் நடைபெற உள்ளது.

இந்தியாவின் மொத்த பட்டாசு உற்பத்தியில் சுமார் 90% பங்களிப்பை வழங்கி வரும் தமிழ்நாட்டின் பட்டாசுத் தொழில், ஆண்டுக்கு 6,000 கோடி வர்த்தகத்தையும், 7 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பையும் வழங்கி வருகிறது.

இத்தகைய பிரம்மாண்ட தொழில்துறையில் தொழிலாளர் பாதுகாப்பு, தானியங்கி இயந்திரமயமாக்கல் தீ தடுப்பு மற்றும் அவசரகாலத் தயார்நிலை ஆகியவை இனி தனித்தனி பிரச்சனைகளாகப் பார்க்கப்படாமல், ஒருங்கிணைக்கப்பட்ட தொழில்முறை முன்னுரிமையாக அணுகப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் கலந்தாய்வு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. தமிழ்நாடு பட்டாசு மற்றும்அமோர்சஸ் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தென்னிந்திய பாதுகாப்பு உதிரிபாகங்கள் தயாரிப்பாளர்கள் மற்றும்ஸ்டார்ட்அப்சங்கம்ஆகியவைஇணைந்து நடத்தும் தேசிய கலந்தாய்வு, வரும் செப்டம்பர் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் கோவை ஈச்சனாரியில் உள்ள 'ரத்தினம் கிராண்ட் ஹாலில்' நடைபெறவுள்ள உள்ளது, இந்தத் தேசியக் கலந்தாய்வில் அமைப்பின் முக்கிய பிரதிநிதிகள், பட்டாசு உற்பத்தியாளர்கள், தீயணைப்புத் துறை அதிகாரிகள்,போன்றபாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனங்கள், ரோபோடிக்ஸ் மற்றும் ஏ.ஐ தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறு குறு, நிறுவனங்கள், மற்றும் பொறியியல் கல்லூரிகளின் ஆராய்ச்சி நிபுணர்கள் ஒரே மேடையில் ஒன்றிணைய உள்ளனர்.

இது குறித்து பழனிக்குமார் கோவையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது..

பட்டாசு உற்பத்தித் துறையின் பாதுகாப்பை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லத் தொழில்நுட்பமும் ஆராய்ச்சியையும் இணைப்பது அவசியம். உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் உண்மையான பாதுகாப்புச் சவால்களைக் கண்டறிந்து, அதற்கு ஏற்ற பல்வேறு தொழில்நுட்ப வாய்ப்புகளை ஆராய இந்தக் கலந்தாய்வு ஒரு பாலமாக அமையும்" எனத் தெரிவித்தார்

# கான்கிரீட் நிறுவனம் செல்லும் கனரக வாகனங்களால் நந்தியாளம் சாலை சேதம்: வாகன போக்குவரத்தை நிறுத்த பொதுமக்கள் வலியுறுத்தல்



ராணிப்பேட்டை மாவட்டம் நந்தியாளம் கிராமத்தில் செயல்பட்டு வரும் தனியார் கான்கிரீட் மிக்ஸிங் நிறுவனத்திற்குதினமும் ஏராளமானகனரகவாகனங்கள் சென்று வருவதால் கிராமத்தின் முக்கிய சாலைகள் கடுமையாக சேதமடைந்துள்ளதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

கிராம நுழைவாயில் முதல் பல்வேறு பகுதிகள் வரை சாலைகள் பள்ளம், மேடுகளாக மாறியுள்ளன. குறிப்பாக நுழைவாயில் பகுதியில் பெரிய பள்ளங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் அடிக்கடி விபத்துகளும் ஏற்படுவதாக கூறப்படுகிறது. மேலும், கனரக வாகனங்கள் இடைவிடாமல் இயக்கப்படுவதால் தூசி மாசு அதிகரித்து, மூச்சுத்திணறல் உள்ளிட்ட உடல்நல பாதிப்புகள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் வேதனை தெரிவித்தனர். விடுமுறை நாட்களிலும் வாகன போக்குவரத்து தொடர்ந்துநடைபெறுவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டினர்.

இவ்வழியாக பள்ளி மாணவர்கள் தினமும் பள்ளிகளுக்கு சென்று வருவதில் பெரும் சிரமம் நிலவி வருவதாகவும், கிராம நூலகத்திற்கு செல்லும் பொதுமக்களும்பாதிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலையின் மோசமான நிலை காரணமாக மாணவர்கள், முதியவர்கள் மற்றும் பெண்கள் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் கூறினர்.

இது குறித்துசம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை புகார் அளித்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் தெரிவித்தனர். எனவே, சேதமடைந்துள்ளசாலைகளை உடனடியாக சீரமைத்து, கிராமப்புற சாலைகளில் தனியார் கான்கிரீட் நிறுவனத்தின் கனரக வாகனங்கள் செல்வதைதடை செய்ய வேண்டும் அல்லது மாற்று வழியை ஏற்படுத்த வேண்டும் என நந்தியாளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# வேப்பூர் அருகே மழையில் நனைந்து நெல் மூட்டைகள் சேதம்

கடலூர் மாவட்டம், வேப்பூர் அடுத்த சாத்தியம் பகுதியில் செயல்பட்டு வரும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதமடைந்தன. கடந்த நான்கு நாள்களாக மாலை நேரங்களில் தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை முறையாக பாதுகாப்பாக சேமித்து வைக்காததால், மழைநீரில் நெல் மூட்டைகள் நனைந்து சேதமடைந்தன.

கொள்முதல் நிலையத்துக்கு நெல்லை கொண்டு வரும்சிறு,குறு விவசாயிகள் தங்களது நெல்லை கொள்முதல் செய்ய நாள்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகளின் நெல்லை கொள்முதல் செய்வதில் அலட்சியம் காட்டப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

மேலும், நெல் கொள்முதல் செய்யும் இயந்திரத்தை இயக்குவதற்கு போதிய மின்சார வசதி இல்லாததால், ஜெனரேட்டர் மூலம் இயந்திரத்தை இயக்கிகொள்முதல் பணி மேற்கொள்ளப்படுகிறது. இதனால் கொள்முதல் பணியில் தாமதம் ஏற்பட்டு, விவசாயிகள் நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மழையில் நெல் மூட்டைகள் சேதமடைவதைத் தடுக்கவும், சிறு, குறு விவசாயிகளின் நெல்லை விரைந்து கொள்முதல் செய்யவும், கொள்முதல் நிலையத்தில் போதிய மின்சார வசதி ஏற்படுத்தவும்நடவடிக்கைஎடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

## சைதாப்பேட்டை எம்.சி.ராஜா விடுதியில் அமைச்சர் வன்னி அரசு பேட்டி

# மாட்டிறைச்சி பரிசீலனைக்கு இந்து மக்கள் கட்சி தொண்டரணி மாநில துணைத்தலைவர் குரு ஐயப்பன் கடும் கண்டனம்

சென்னை, சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள எம்.சி.ராஜாசமூகநீதி மாணவர்விடுதியில்(22.09.2026) திடீர் ஆய்வு மேற்கொண்ட சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு, ஆய்வுக்கு பின்னர் அங்கு செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர்,"சமூக நீதி விடுதிகளில் மாணவர்களுக்கு சிக்கன், மட்டன் வழங்கப்பட்டு வருவதைப் போல மாட்டிறைச்சி வழங்க வேண்டும் என மாணவர்கள் கோரிக்கை வைத்துள்ளதாகவும் அது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசித்து பரிசீலனை செய்யப்படும்*" என தெரிவித்துள்ளார். அமைச்சரின் இந்த கருத்துக்கு *இந்து மக்கள் கட்சி தொண்டரணி சார்பாக கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.*



தமிழகத்தில் உள்ள 1300-க்கும் மேற்பட்ட அரசு சமூக நீதி விடுதிகளில் ஏற்கனவே மாணவர்களுக்கு தரமான உணவாக வாரத்திற்கு 5 நாட்கள் முட்டை, வாரத்திற்கு ஒரு நாள் சிக்கன், ஒரு நாள் மட்டன்* வழங்கப்பட்டு வருகிறது.இதுவேபோதுமானது. இந்நிலையில் புதிதாக *மாட்டிறைச்சி* வழங்குவது குறித்து பரிசீலிப்பது *பசுவை கோமாதாவாக, தெய்வமாக வழிபடும் கோடிக்கணக்கான இந்து மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் செயல்ஒருவேளை அரசு மாட்டிறைச்சி சேர்க்க வேண்டும் என்று முடிவு செய்தால், அதே போல் பன்றி இறைச்சியையும் உணவுப் பட்டியலில் சேர்க்க வேண்டும்.* சமூகநீதிஎன்பதுஅனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும். எனவே தமிழக அரசு இந்த மாட்டிறைச்சி பரிசீலனை முடிவை உடனடியாக கைவிட வேண்டும்.

தவறும் பட்சத்தில் *இந்து மக்கள் கட்சி தொண்டரணி சார்பாக தமிழகம் முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு, குரு ஐயப்பன் *மாநில துணைத் தலைவர் – தொண்டரணி இந்து மக்கள் கட்சி தேனி மாவட்டம்

# மக்களுக்கு சேவை செய்யும் நல்ல எண்ணத்துடன்தான் விஜய் அரசியலுக்கு வந்துள்ளார்

## கோவையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரன் பேட்டி

மக்களுக்கு சேவை செய்யும் நல்ல எண்ணத்துடன்தான் விஜய் அரசியலுக்கு வந்துள்ளார், கோவை விமான நிலையத்தில், நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரனும் நடிகருமான தர்ஷன் கணேசன் செய்தியாளர்களிடம் பேட்டி

டி.டி. பாலச்சந்திரன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'லெனின் பாண்டியன்' திரைப்படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரன் தர்ஷன் கணேசன் கதாநாயகனாக அறிமுகமாகியுள்ளார். இப்படத்தில் நடிகர் கங்கை அமரன், நடிகை ரோஜா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இளையராஜா இசையமைத்துள்ள இப்படம் செப்டம்பர் 25-ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்நிலையில், படக்குழுவைச் சேர்ந்த தர்ஷன் கணேசன் மற்றும் நடிகரும் இசையமைப்பாளருமான கங்கை அமரன் கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தனர்.



அப்போது பேசிய தர்ஷன் கணேசன், நாடகப் பயிற்சிக்குப் பிறகு திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்பு தனக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்தார். சென்னையில் பிறந்து வளர்ந்த தனக்கு, கிராமத்தை மையமாகக் கொண்ட கதையில் நடிப்பது சவாலாக இருந்ததுடன், தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாகவும் அமைந்ததாகக் கூறினார்.

மேலும், மூத்த கலைஞர்களுடன் இணைந்து பணியாற்றியது சிறந்த அனுபவமாக இருந்ததாகக் குறிப்பிட்ட அவர், மக்களின் அன்றாட வாழ்வியலைப் பிரதிபலிக்கும் வகையில் கதை அமைந்துள்ளதால், திரைப்படம் பார்வையாளர்களுடன் எளிதில் ஒன்றிப்போகும் என நம்பிக்கை தெரிவித்தார். திரையுலகினர் அரசியலுக்கு வருவது குறித்த கேள்விக்கு பதிலளித்த தர்ஷன் கணேசன், நடிகர் விஜய் மக்களுக்கு சேவை செய்யும் நல்ல எண்ணத்துடன்தான் அரசியலில் களமிறங்கியுள்ளதாகவும், அவரை உற்சாகப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய நடிகர் கங்கை அமரன், 'லெனின் பாண்டியன்' திரைப்படம் திரையரங்கில் ஒரு திரைப்படத்தைப் பார்ப்பது போன்ற உணர்வை மட்டுமல்லாமல், ஒரு கிராமத்து மக்களின் உண்மையான வாழ்க்கையை நேரில் பார்த்துவிட்டு வருவது போன்ற உணர்வையும் ஏற்படுத்தும் என்றார்.

நாட்டின் பிரச்சினைகள், மக்கள் எதிர்கொள்ளும் நிலை, அதிகாரிகளின் செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை அழகாகப் பேசும் வகையில் இப்படம் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், தனது அண்ணன் இளையராஜா இசையமைத்துள்ள பாடல்கள் மிகவும் சிறப்பாகஅமைந்துள்ளதாகக் குறிப்பிட்ட கங்கை அமரன், "எங்கள் அண்ணன் இளையராஜாவின்இசை பெரிதாக வர வேண்டும் எனநினைத்தேன்;அதேபோல் வந்துவிட்டார்" என மகிழ்ச்சி தெரிவித்தார்

# Why is IIT Bombay on boil? A suicide, protests, a professor in focus, divided faculty



A second-year BTech student died by suicide at IIT Bombay's Powai campus last week.

The situation at the Indian Institute of Technology Bombay (IIT-B) remained tense on Tuesday as students continued their protest following the death by suicide of a second-year undergraduate student on the campus on September 18. What began with questions over an incident during a mid-semester examination has now turned into a larger protest over the institute's examination procedures, disciplinary action, student welfare and the handling of the case.

Students have continued to raise questions over what happened during and after the examination and have demanded an independent third-party inquiry into the circumstances surrounding the student's death. They have also questioned the process followed after the student was allegedly caught using a mobile phone during the examination.

The students have made it clear that their protest is not in support of cheating or academic malpractice. Their concern, they said, is about the process followed by the institute after the examination incident and the circumstances that followed.

Professor Suryanarayana Doolla in focus

The protest has been continuing for several days on the IIT Bombay campus. Students have gathered at the main gate and have also held candlelight protests. After an open house with the institute administration on Monday, a group of around 40 students continued to sit at the main gate. They said they would continue their protest until action is taken against Professor Suryanarayana Doolla.

Doolla was the professor associated with the examination incident and was later removed from his position as Dean (Student Affairs). However, the students said their demand was not limited to removal from an administrative post. They wanted him suspended from his teaching duties while the inquiry into the case is conducted.

The students are also demanding that the institute make public reports related to previous student suicide cases on the campus. They have raised concerns about the wider student support system and want changes in the way such cases and disciplinary matters are handled.

Admin's open house with students and apology

The administration held an open house with students after the protests continued. During the meeting, several concerns raised by students were discussed. The students have also submitted a list of demands, including an independent investigation into the incident and changes in the process followed in cases of alleged examination malpractice.

The administration has also apologised for aspects of its earlier communication regarding the incident. The students had questioned the description of the examination incident and the manner in which the details were communicated before the circumstances had been fully established. The protests have therefore moved beyond the immediate examination incident. Students are now asking questions about the institute's disciplinary system, student welfare and whether students facing academic or disciplinary action receive adequate support.

One of the major demands of the protesting students is an independent third-party inquiry into the circumstances surrounding the student's death. They have said that the inquiry should examine what happened during the examination, what action was taken afterwards and whether the prescribed process was followed at every stage.

Students have also questioned the process followed after the alleged malpractice was detected. They have demanded greater clarity about the exact procedure followed when a student is caught during an examination and what support is provided to the student afterwards.

# 100 நாள் வேலை திட்ட பெண்களை அலுவலக கோப்புகளை தூக்க பயன்படுத்துவதா? பா.ஜ.க. மாவட்ட தலைவர் சித்ராங்கதன் கண்டனம்

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலகத்தில், கோரம்பள்ளம் பகுதியைச் சேர்ந்த 100 நாள் வேலை திட்ட பெண் பணியாளர்களை அழைத்து வந்து,அலுவலக கோப்புகளை கீழ்தளத்தில் இருந்து மாடிக்கு எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபடுத்தியதாக புகார் எழுந்துள்ளது.

அலுவலக கோப்புகளை மாடிக்கு எடுத்துச் சென்ற பின்னர் பணியை முடித்துவிட்டு செல்லலாம் என்றும், 100 நாள் வேலை திட்டத்தில் பணிபுரிந்ததாக பதிவேட்டில் பதிவு செய்து கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட பெண்கள் கூறியுள்ளனர்.

இது குறித்து தூத்துக்குடி தெற்கு மாவட்ட பா.ஜ.க. தலைவர் சித்ராங்கதன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர்வெளியிட்டுள்ள அறிக்கையில், "100 நாள் வேலை வாய்ப்பு திட்டம்



என்பது கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பையும் வாழ்வாதார பாதுகாப்பையும் வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட திட்டமாகும். நீர்நிலைகள் தூர்வாருதல், நீர்வளப் பாதுகாப்பு, நில மேம்பாடு, மரக்கன்றுகள் நடுதல் உள்ளிட்ட ஊரகவளர்ச்சிக்கு பயன்படும் பணிகளே திட்டத்தின் நோக்கத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், "இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் பெண்களை மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலகத்திற்கு அழைத்து வந்து, அலுவலக கோப்புகளை தூக்கிச் செல்லும் பணியில் ஈடுபடுத்தியதாக கூறப்படுவது அதிர்ச்சியளிக்கிறது. 100 நாள் வேலை திட்டத்தின் பெயரில் ஒரு பணியை பதிவு செய்துகொண்டு, அதற்கு தொடர்பில்லாத வேறு பணியை தொழிலாளர்களிடம் வாங்குவது முற்றிலும் கண்டிக்கத்தக்கது" என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த புகார் குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடியாக விசாரணை நடத்த வேண்டும். சம்பந்தப்பட்ட பெண்களிடம் நேரடியாக விசாரணை நடத்தி, அன்றைய தினம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணி, பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பணி மற்றும் அவர்கள் உண்மையில் மேற்கொண்ட பணி ஆகியவை குறித்து முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் சித்ராங்கதன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், "100 நாள் வேலை திட்டம் என்பது கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கான திட்டமே தவிர, அரசு அலுவலகங்களின் பணிச்சுமையை குறைப்பதற்கான திட்டம் அல்ல" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.